## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை

## வட்ட அலுவலகம், வேப்பந்தட்டை, பெரம்பலூர் மாவட்டம்

அறிவிக்கை எண் : அ1/2854/2025 நாள்: 05.07.2025

பெரம்பலூர் மாவட்ட வருவாய் அலகில், வேப்பந்தட்டை வருவாய் வட்டத்தில் காலியாக உள்ள கிராம உதவியாளர் பணியிடங்களை, தமிழ்நாடு கிராம உதவியாளர் பணிகள் சிறப்பு விதிகளின் கீழ் நிரப்பிட, தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து **விண்ணப்பங்கள்** வரவேற்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு, கல்வி தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட நபர்கள் **விண்ணப்பிக்கலாம்.**

| | |
|---|---|
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெறுதல் | **07.07.2025 முதல் 05.08.2025 வரை அலுவலக வேலை நாட்களில் காலை 10.30 மணி முதல் மாலை** 5.00 மணி வரை மட்டுமே நேரில், **பதிவஞ்சல்** மற்றும் விரைவு தபால் (கொரியர்) வாயிலாக வரப்பெறும் விண்ணப்பங்கள் வேப்பந்தட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் வாங்கப்பெறும். மேலும், 05.08.2025 மாலை 5.00 மணிக்குமேல் நேரடியாகவோ அல்லது பதிவஞ்சல் மற்றும் விரைவு தபால் (கொரியர்) மூலமாகவோ வரும் **விண்ணப்பங்கள்** ஏற்றுக்கொள்ளப்படாது. |
| விண்ணப்பம் சமர்பிப்பதற்கான கடைசி நாள் | 05.08.2025 |
| படித்தல் மற்றும் எழுதுதல் திறனறித் தேர்வு நடைபெறும் நாள் | 06.09.2025 |
| நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள் | 22.09.2025 முதல் 28.09.2025 |

| | |
|---|---|
| பதவியின் பெயர் | கிராம உதவியாளர் |
| பணி விதிகள் | தமிழ்நாடு கிராம உதவியாளர் பணி விதிகள் சிறப்பு விதி |
| சம்பள விகிதம் | சிறப்பு காலமுறை ஊதியம் ரூ.11,100–35,100/– |
| வட்டத்தின் பெயர் | வேப்பந்தட்டை |
| நிரப்பப்பட உள்ள பணியிடங்கள் எண்ணிக்கை | 03<br>(1). மேட்டுப்பாளையம்(வடக்கு), (2).தொண்டப்பாடி, (3). வெங்கலம் (கிழக்கு) |
| இன சுழற்சி விவரம் | 23– மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (பெண்கள்) (முன்னுரிமை அற்றவர்) |
| | 24– பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்கள் தவிர) (பொது) |

| | |
|---|---|
| | (முன்னுரிமை அற்றவர்) |
| | 25– பொதுப்பிரிவினர் (பொது) (முன்னுரிமை அற்றவர்) |
| கல்வித் தகுதி | தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இடைநிலைப்பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் தேர்வில் SSLC – Secondary School Living Certificate Examination தமிழ் ஒரு பாடமாக கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும் (குறிப்பு – SSLC (Secondary School Living Certificate Examination) மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும். தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். |
| இதர தகுதிகள் | 1. விண்ணப்பதாரர் வேப்பந்தட்டை வட்டத்தை சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.<br>2. மிதிவண்டி மற்றும் இரு சக்கர மோட்டார் வாகனம் ஓட்ட தெரிந்திருக்க வேண்டும்.<br>3. தேர்வு செய்யப்படுபவரின் நடத்தை குறித்தும் முந்தைய குற்றப் பின்னனி குறித்தும் நியமன அலுவலர் அறிந்து திருப்தி அடைய வேண்டும்.<br>4. அடிப்படை விதி 10 இன் படி உடற்தகுதி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.<br>5. தேர்ந்தெடுக்க கூடிய நபரின் கணவரோ, மனைவியோ உயிரோடிருக்கும் போது வேறொரு திருமணம் செய்திருக்க கூடாது. |
| வயது வரம்பு<br>(01.07.2025 அன்று) | குறைந்தபட்ச வயது – 21 வயது (அனைத்து பிரிவினருக்கும்)<br>அதிகபட்ச வயது – 32* வயது (பொது பிரிவினருக்கு)<br>– 37* வயது (இதர பிரிவினர்கள்)<br>– (BC, BC (M), MBC/DNC, SC, SC(A), ST)<br>– மாற்றுத்திறனாளிகளுக்கு அதிபட்ச வரம்புடன் 10 ஆண்டுகள் விதித்தளர்வு வழங்கப்படும்.<br>– முன்னாள் இராணுவத்தினருக்கு,<br>50* வயது (பொது பிரிவினருக்கு)<br>55* வயது (இதர பிரிவினருக்கு)<br>(BC, BC (M), MBC/DNC, SC, SC(A), ST)<br>*அரசாணை எண். 91 மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை நாள்:13.09.2021 இன்படி வயது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. |
| விண்ணப்பிக்கும் முறை | 1. விண்ணப்பப்படிவம் பெரம்பலூர் மாவட்ட நிர்வாகத்தின் இணையதள முகவரி – https://perambalur.nic.in இல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் நேரிலோ, அஞ்சல் வழியாகவோ மற்றும் விரைவு தபால் (கொரியர்) மூலமாகவோ சமர்ப்பிக்கலாம்.<br>2. விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப படிவத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தங்களது பெயர், தந்தை / கணவர் பெயர், பிறந்த தேதி, கல்வித்தகுதி, |

| | |
|---|---|
| | பாலினம், மதம், சாதி, சொந்த ஊர், வட்டம், மாவட்டம் மற்றும் முன்னுரிமை விவரம் ஆகியவற்றை பூர்த்தி செய்து கடவுச்சீட்டு அளவு சமீபத்திய புகைப்படத்தினை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டியும், ஒரு புகைப்படத்தை விண்ணப்பத்துடன் இணைத்தும், தகுதியான சான்றுகளின் நகல்களுடன் அனுப்பவேண்டும். அசல் சான்றிதழ்களை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பக்கூடாது. |

வருவாய் வட்டாட்சியர்,
வேப்பந்தட்டை வட்டம்,
பெரம்பலூர் மாவட்டம்.